# கொரோனா காலத்தில் எடப்பாடி பழனிச்சாமி கிழித்தது என்ன?

**கொ**ரோனா காலத்தில் தான் ஏதோ மக்களை காத்து கிழித்துவிட்டதை போல எடப்பாடி பழனிச்சாமி சவுண்டு விட்டுக் கொண்டிருக்கிறார். கொரோனாவைவிட கொடூரமான ஆட்சியை நடத்திக்கொண்டிருந்தவர் எடப்பாடி பழனிச்சாமி. மருத்துவமனைகளில் மருந்துகள் இல்லை. படுக்கைகள் இல்லை. ஆக்சிஜன் கிடைக்கவில்லை. பிளீச்சிங் பவுடரை ஆங்காங்கே தூவி கொரோனாவை கட்டுப்படுத்துவதாக நாடகமாடினார்கள். அந்த பவுடரை வாங்கியதிலும் ஊழல் நடந்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளில் நோட்டீஸ் ஒட்டி மக்களை உளவியல் சித்திரவதைக்கு ஆளாக்கி னார்கள். வீடுகளும் தெருக்களும் தகரம் வைத்து தடுக்கப்பட்டு மக்கள் அவதிக்குள்ளாக்கப்பட்டார்கள். இ-பாஸ் என்ற நடைமுறையால் மக்களுக்கு நெருக்கடி கொடுக்கப்பட்டது.

மக்களுக்கு எங்கும் வேலையில்லை கையில் காசு இல்லை. வரலாறு காணாத துயரத்தை மக்கள் அனுபவித்தார்கள். கையாலாகாத எடப்பாடி அரசு சுகாதார துறை செயலாளர் டெல்லி தப்லீக் ஜமாத் மூலமாகத்தான் கொரோனா பரவியது என்று பகிரங்கமாக இஸ்லாமிய மதவெறுப்பை பரப்பினார்.

தமிழ்நாட்டின் பல ஊர்களில் இஸ்லாமியர்களின் கடைகளில் பொருள் வாங்காதீர்கள் என்று சங்கிகள் பரப்புரை செய்தார்கள். அவர்கள் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக இஸ்லாமிய அமைப்புகளை சேர்ந்தவர்களோ எவரும் நெருங்க அஞ்சிய கொரோனாவில் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்காக முன் நின்றார்கள்.

திமுக தொண்டர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ எங்கெங்கும் களத்தில் நின்றார்கள். நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். அந்த பணியில் ஈடுபட்டிருந்த திமுக சட்டமன்ற உறுப்பினர் ஜெ. அன்பழகன் கொரோனா தொற்றுக்கு ஆளாகி மரணமடைந்தார்.

முழு இயக்கத்தையும் கொரோனா நிவாரணப் பணிகளில் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஈடுபடுத்தினார். அன்றைய அ.தி.மு.க. அரசு கொரோனா தடுப்பு நடவடிக்கையில் அடைந்த தோல்விகளை ஒவ்வொரு நாளும் அறிக்கைகளில் சுட்டிக்காட்டி என்ன செய்யவேண்டும் என்பதை அறிவுறுத்தினார். ஆனால் கேளாச்செவிகளை உடைய எடப்பாடி பழனிச்சாமி கொரோனாவில் இறந்தவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை மூடி மறைப்பதிலேயே குறியாக இருந்தார். ஆனால் தி.மு.க. அரசு அறிக்கைகளிலுள்ள முரண்பாடுகளை சுட்டிக்காட்டி உண்மையாக இறந்தவர்களின் எண்ணிக்கையை அம்பலப்படுத்தியது.

இதே கொரோனா ஊரடங்கு காலத்தில்தான் எடப்பாடி பழனிச்சாமியின் காவல்துறை சாத்தான்குளம் காவல் நிலையத்தில் தந்தையையும் மகனையும் அடித்து கொன்றது. ஆனால் அவர்கள் இருவரும் உடல்நலக் குறைவினால் இறந்தார்கள் என்று நெஞ்சில் ஈரமே இல்லாமல் நியாயப்படுத்தியவர் எடப்பாடி பழனிச்சாமி. அந்தக் குற்றத்தில் ஈடுபட்ட 9 பேருக்கும் சமீபத்தில் நீதிமன்றம் மரண தண்டனை அளித்தது. உண்மையிலேயே அது எடப்பாடி ஆட்சிக்கு விதித்த தண்டனையாக கருதப்பட வேண்டும்.

அ.தி.மு.க.வினர் தங்களது எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியின் சாதனையாக அவ்வப்போது குறிப்பிடுவது பத்தாம் வகுப்பில் அனைவருக்கும் ஆல் பாஸ் போட்டதைத் தான். ஆனால் அப்படி பாஸ் போடப்பட்ட இளைஞர்கள் இன்றைக்கும் நேர்முகத் தேர்வுகளில் 'கொரோனா பேட்ஜ்' என்று ஒதுக்கி வைக்கப்படுவதுதான் எதார்த்தமாக இருக்கிறது. கொரோனா காலத்தில் மக்களை பேரழிவிற்கு தள்ளியவர் எடப்பாடி பழனிச்சாமி. அப்போதுகூட தற்காலிகமாக மதுக்கடைகளை மூட மறுத்தார். தி.மு..கவின் கடும் போராட்டத்திற்கு பிறகு மூடினார்.

கொரோனா இரண்டாம் அலை உச்சத்தில் இருந்த போது திமுக ஆட்சிக்கு வந்தது. மருத்துவமனைகளில் போர்க்கால அடிப்படையில் படுக்கைகள் தயார் செய்யப்பட்டன. மக்களுக்கு தேவையான தடுப்பூசிகள், மருந்துகள், ஆக்சிஜன் முதலானவற்றை பெற பெரும் முன்னெடுப்பை செய்தது. ஆட்சிக்கு வந்ததும் உடனடியாக 4000 ரூபாய் கொரோனா நிவாரண நிதியாக வழங்கப்பட்டது. வீடுகளுக்கே சென்று காய்கறி விநியோகம் செய்யும்



**மனுஷ்யபுத்திரன்**
மாநில ஆலோசகர், தி.மு.க.
தகவல் தொழில் நுட்ப அணி

முறை செயல்படுத்தப்பட்டது. மூன்று மாதத்திற்குள் மரணங்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்தது. தமிழ்நாடு முழுக்க பெரும் இயக்கமாக தடுப்பூசி செலுத்தப்பட்டது. மூடிக்கிடந்த ஸ்டெர்லைட் ஆலையை திறந்து ஆக்சிஜன் உற்பத்தி செய்யப்பட்டது. முதலமைச்சரே கவச உடை அணிந்து கொரோனா வார்டிற்குச் சென்று நோயாளிகளை பார்வையிட்டதன் மூலம் கொள்ளை நோய்க்கு எதிரான போராட்டத்திற்கு உத்வேகம் அளித்தார். அனைத்தும் அரசு துறைகளும் இப்போராட்டத்தில் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டன. அனைத்து அமைச்சர்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் மக்களை காக்கும் போராட்டத்தில் களத்தில் நின்றார்கள். அன்று கொரோனா தடுப்பிற்காக திராவிட மாடல் அரசு மேற்கொண்ட செயல்பாடுகள் தேசிய அளவில் பெரும் பாராட்டு பெற்றன.

ஆனால் எடப்பாடி பழனிச்சாமி கொரோனா காலத்தில் முற்றாக மக்களை கைவிட்ட அவலத்தை மூடிமறைத்து தான் ஏதோ சிறப்பாக செயல்பட்டதைப் போல இப்போது கதைவிட்டு திரிகிறார்.

அ.தி.மு.க. அரசின் கொரோனா தோல்வி வரலாறும் திமுக அரசின் கொரோனாவை வென்ற வரலாறும் நம் கண்முன்னே நிகழ்ந்தது. அதை மாற்றி எழுத எடப்பாடி பழனிச்சாமி சொல்லும் பொய்களும் புரட்டுகளும் ஒரு போதும் எடுபடாது.

---



சென்னை கிழக்கு மாவட்டம், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில்

## துறைமுகம், கொளத்தூர் தொகுதிகளில் நடைபெறும் பிரச்சாரம் மற்றும் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடைபெறும் விவரம்!

**மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!**

| நாள் 11.4.2026 சனிக்கிழமை | பொருள் | இடம் |
|---|---|---|
| காலை 8.00 மணி | துறைமுகம் சட்டமன்ற தொகுதி **கழக வேட்பாளர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** 59அ வட்டத்தில் வாக்குசேகரிப்பு | பேரறிஞர் அண்ணா நினைவு மன்றம், சத்தியவாணி முத்துநகர் துறைமுகம் மேற்கு பகுதி |
| காலை 10.30 மணி | துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட **காங்கிரஸ் கட்சியின்**, மாவட்ட தலைவர், பகுதித்தலைவர், வட்டத்தலைவர் ஆலோசனைக் கூட்டம். | துறைமுகம் மேற்கு பகுதி தேர்தல் பணிமனை, வால்டாக்ஸ் சாலை, ப்ளு ஸ்டார் ஓட்டல் எதிரில் |
| காலை 11.00 மணி | துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட **விடுதலை சிறுத்தை கட்சியின்** மாவட்ட செயலாளர், பகுதிசெயலாளர், வட்டசெயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | 55அ வட்ட தேர்தல் பணிமனை 84, நாட்டுபிள்ளையார் கோயில் தெரு, ஏழுகிணறு, சென்னை–1. |
| காலை 11.30 மணி | துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட **ம.தி.முக** கட்சியின் மாவட்ட செயலாளர், பகுதிச் செயலாளர், வட்டசெயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | 56வது வட்ட தேர்தல் பணிமனை எண்.84/108, சண்முகராயன் தெரு, பிராட்வே, சென்னை–1. |
| நண்பகல் 12.00 மணி | துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட **CPM, CPI** கட்சிகளின் மாவட்ட செயலாளர், பகுதி செயலாளர், வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் | துறைமுகம் கிழக்கு பகுதி தேர்தல் பணிமனை எண்.49/68, வெங்கட மேஸ்திரி தெரு, மண்ணடி. |
| நண்பகல் 12.30 மணி | **கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட** பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள் ஆலோசனைக்கூட்டம். | கொளத்தூர் கிழக்கு பகுதி தேர்தல் பணிமனை, பேப்பர்மில்ஸ் சாலை, அகரம். |
| மாலை 5.00 மணி | நகை தொழில் முனைவோர்களுடன் கலந்துரையாடல் | காத்ரி சமாஜ்பவன் பார்க்டவுன், சென்னை–3. |
| மாலை 5.00 மணி | துறைமுகம் சட்டமன்ற தொகுதி **கழக வேட்பாளர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** 54அ, 54ஆ வட்டத்தில் வாக்குசேகரிப்பு | PKG கார்டன் அண்ணா பிள்ளைத் தெரு சந்திப்பு துறைமுகம் மேற்கு பகுதி |

மேற்கண்ட வாக்குசேகரிப்பு மற்றும் ஆலோசனை கூட்டங்களில் அந்தந்த பகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள், தோழமைக்கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

குன்னம் சட்டமன்றத் தொகுதியில் - வேட்பாளர் சா.சி.சிவசங்கரை ஆதரித்து -

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பரப்புரை!

பெரம்பலூர், ஏப்.11–

இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குன்னம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் டாக்டர் ஜெய லெட்சுமி ஆகியோரை ஆதரித்து, குன்னம் கடைவீதியில் பிரச்சாரம் செய்தார்,

அப்போது அவர் பேசும்போது:– தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த ஐந்தாண்டில் எண்ணற்ற நல்ல பல திட்டங் களை கொண்டு வந்துள்ளார். குறிப்பாக பெண்களுக்கு இலவச பேருந்து பயணம், மகளிர் உரிமைத் தொகை மற்றும் நான் முதல்வன் திட்டம், கல்லூரி படிக்கும் மாணவர்களுக்கு லேப்டாப் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங் களை செய்துள்ளார்.

மேலும் குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களையும் முழுமையாக செய்துள்ளதாகவும் தெரிவித்தவர், தற்பொழுது குன்னம் தொகுதிக்கு கேட்கப்பட்டுள்ள அனைத்து திட்டங்களும் தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் உடனடியாக செய்து தரப்படும் என தெரிவித்தவர், எடப்பாடி பழனிச்சாமி என்னை பற்றி பல இடங்களில் அதிகமாக பேசி வருகிறார்,


அதிலும் குறிப்பாக எனக்கு அனுபவம் இல்லை என தெரிவிக்கிறார் அது உண்மைதான் அவரைப் போல எனக்கு அனுபவம் கிடையாது அவர் அ.தி.மு.க.வில் முதலில் ஜெயலலிதா காலில் விழுந்தவர், பின்பு சசிகலா காலில் விழுந்து ஆட்சியைப் பிடித்தார். அதனை தொடர்ந்து தற்போது மோடியின் காலில் விழுந்து கிடக்கிறார் என அவர் படத்துடன் காட்டி பேசியவர், எடப்பாடி போல் நான் யார் காலில் விழுந்தும் பதவிக்கு வரவில்லை, அந்த அனுபவம் எனக்கு இல்லை அவர் எப்பொழுதும் அ.தி.மு.க.வில் பொதுச் செயலாளராக நீடிக்க வேண்டும். அப்போதுதான் தி.மு.க. வெற்றி பெறும், இந்த முறை அதையும் தாண்டி அவரை வீட்டுக்கு அனுப்ப மக்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என கேட்டுக் கொண்ட அவர் தி.மு.க. தற்போது தேர்தல் வாக்குறுதியாக அறிவித்துள்ள 2000 மகளிர் உரிமைத்தொகை, 8000 த்திற்கான கூப்பன் ஆகியவைகள் குறித்து எடுத்துரைத்து பேசியவர், குன்னம் சட்டமன்ற தொகுதியில் அமைச்சராக இருந்த சிவசங்கர் அ.தி.மு.க. ஆட்சியில் ஓடிய டப்பா பேருந்துகளை அனைத்தும் புதிய பேருந்துகளாக கொண்டு வந்து தமிழகத்தை அனைத்து பகுதிகளுக்கும் பேருந்துகளை இயக்கியுள்ளார்.

ஆகவே இவரை 50 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

---

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க, தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

## மூத்த ஊடகவியலாளர் 'தமிழ் கேள்வி' தி.செந்தில்வேலின் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!



**தலைமைக் கழக அறிவிப்பு!**

| நாள் | மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|
| 13.04.2026 | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் |
| 14.04.2026 | தேனி தெற்கு | ஆண்டிபட்டி |
| 15.04.2026 | திருநெல்வேலி மத்திய | திருநெல்வேலி |
| 16.04.2026 | கன்னியாகுமரி கிழக்கு | கன்னியாகுமரி |
| 18.04.2026 | காஞ்சிபுரம் தெற்கு | உத்திரமேரூர் |
| 19.04.2026 | சென்னை தெற்கு | சைதாப்பேட்டை |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள்: 10.04.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



பல்லாவரம் பெரிய மசூதியில் பல்லாவரம் தொகுதி தே.மு.தி.க. வேட்பாளர் அனகை டி. முருகேசன், இ.கருணாநிதி எம்எல்ஏ தலைமையில் மனிதநேய மக்கள் கட்சி துணைப் பொதுச் செயலாளர் தாம்பரம் யாக்கப் முன்னிலையில் தொழுகை முடித்து வந்த இஸ்லாமிய சகோதரர்களிடம் வாக்கு சேகரித்தார்கள். அப்பொழுது. திமுக மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உடன் இருந்தார்கள்.

---

கும்மிடிப்பூண்டி தொகுதி கழக வேட்பாளர் டி.ஜெ.கோவிந்தராஜனை ஆதரித்து

# கவரப்பேட்டையில் கனிமொழி சோமு எம்.பி. வாக்கு சேகரிக்கிறார்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் அறிக்கை!

*திருவள்ளூர், ஏப் 11; திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப் பூண்டி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் டி.ஜெ.*



*கோவிந்தராஜன் ஆதரித்து திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம் எஸ் கே ரமேஷ் ராஜ் தலைமையில் கனிமொழி சோமு எம்பி கும்மிடி ப் பூண்டி தெற்கு ஒன்றியம் கவரப்பேட்டை பஜார் வீதியில் இன்று (11-04-2026 -சனிக்கிழமை) மாலை 5 மணி அளவில் உ த ய சூ ரி ய ன் சின்னத்திற்கு வாக்கு சேகரிக்கிறார்.*

*இந்நிகழ்ச்சியில் கும்மிடிப்பூண்டி தொகுதிக்குட்பட்ட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கழக இந்நாள் முன்னாள் மூத்த முன்னோடிகள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்ந்த நிர்வாகிகள் அனைவரும் தவறா மல் கலந்து கொள்ள வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்எஸ்கே ரமேஷ் ராஜ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துக் கொண்டார்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ப.உ. சண்முகம்**
**ஏப்ரல் 11 (2007)**



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அன்பும், நட்பும் கொண்டவர். திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவராகவும், கலைஞர் அவர்களின் அரசில் அமைச்சராகவும், கழகத்தின் துணைப் பொதுச்செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**"தி.மு.க. வரலாற்று ஏட்டில் திருவண்ணாமலை இடைத்தேர்தல் ஓர் மகத்தான திருப்புமுனை. அந்தத் தேர்தலில் திருவண்ணாமலையிலேயே தங்கி, தேர்தல் பணியாற்றுமாறு அண்ணா அவர்கள் எனக்குக் கட்டளையிட்டிருந்தார். அந்த இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.க. வேட்பாளர் ப.உ. சண்முகம் அவர்களுக்கு ஒரு தனிச் சிறப்பும், தனிப் பெருமையும் வாய்த்தது என்றே சொல்லலாம். இடையிடையே என்னுடன் ஊடல் கொண்டாராயினும் – இறுதிவரை கொள்கைக் குன்றமெனத் திகழ்ந்த காரணத்தால் என் இதயத்தில் இடம் பெற்ற நண்பர்களில் ஒருவராகவே திகழ்ந்தவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் நினைவு கூரப்பட்டவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள், 1993ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், இவருக்கு 'அண்ணா விருது' வழங்கிச் சிறப்பித்தார்கள்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**